# MANIDHANAEYAM FREE IAS ACADEMY – TNPSC GROUP II & IIA
# UNIT – III – SOCIO ECONOMIC ISSUES

**வேலைவாய்ப்பு உறுதி திட்டம்**

## 1. MGNREG Act - 2005

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டமானது, ''மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டமாக'' பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**நோக்கம்**

1. ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஆண்டில் 100 நாட்களுக்கு வேலையளித்தல்
2. வறுமையை ஒழித்து, நிலையான மேம்பாட்டை அடைதல்

**பணிகள் தேர்வு செய்யும் முறை**

1. ஒவ்வொரு ஊராட்சியிலும் இத்திட்ட விதிமுறைகளின் படி, மேற்கொள்ளப்பட உள்ள பணிகளின் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.
2. கிராம சபையில் தீர்மானம் பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

**தகுதிகள்:**

1. வேலைசெய்ய இயலுகின்ற உடல்திறன் கொண்டவராக இருக்க வேண்டும்.
2. அந்த ஊராட்சியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
3. வயது 18 நிரம்பிருக்க வேண்டும்.
4. பணிகளில் குறைந்தபட்சம் 33% பெண்களுக்கு ஒதுக்க வேண்டும்.
5. வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் மட்டும் அல்லாமல், வேலைகோரும், மற்றவர்களும் வேலைபெற தகுதியானவர்கள்

**நடைமுறை:**

இத்திட்டத்தின் கீழ் நாளொன்றுக்கு குறைந்த பட்சம் 8 மணி நேரம் வேலை செய்தால், நிர்ணயிக்கப்பட்ட அளவு ஊதியம் வழங்கப்படும்.

**சிறப்பம்சங்கள்**

1. குறைந்த பட்ச ஊதியச் சட்டம் 1948 ன் படி, விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
2. ஆண், பெண்களுக்குச் சமஊதியம் வழங்கப்படும்.
3. வேலையின் போது விபத்து ஏற்பட்டு ஊனமுற்றால் (அ) உயிரிழப்பு ஏற்பட்டால் ரூ 25,000 வழங்கப்பட வேண்டும்.
4. 15 நாட்களுக்குள் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
5. வேலை நடைபெறும் இடங்களில், குடிநீர், நிழற்கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.
6. கிராமசபை ஒப்புதல் பெற்று, திட்டத் தொகுப்பில், வேலைகள் கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்த ஒதுக்கப்பட வேண்டும்.

**முக்கியத்துவம்**

1. நிதியளவு மத்திய : மாநில அரசு பங்கு 90 : 10
2. தணிக்கை கிராமசபை மூலம் செய்யப்படுகிறது.
3. குறைதீர்க்கும் இலவச தொலைபேசிஎண் : 1299
4. ஊதியம் வங்குக் கணக்கில் செலுத்தப்படும்

5. தமிழ்நாட்டில் 02.08.2006 ல் அரசாணை வெளியிடப்பட்டது.
6. சமூக பங்களிப்பு பிரிவில் தமிழ்நாடு விருதைப் பெற்றுள்ளது
7. COVID – 19 Rs 182 + 202

**நன்மைகள்**

1. உலகின் மிகப்பெரிய ஊரக மேம்பாட்டுத்திட்டம்
2. சட்டத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட வேலைவாய்ப்பு
3. பெண்களுக்கு அதிகாரமளித்தல்
4. வறுமை (ம) வேலையின்மையைக் குறைத்தல்
5. வேலையின்மைக்கான படித்தொகை
6. ஊரக மேம்பாட்டுத்திட்டங்களுடன் இணைந்துக் செயல்படுதல்
7. 15 நாட்களுக்குள் ஊதியம் பெறுதல்
8. சமூக தணிக்கை
9. கிராம சபைகளுக்கு அதிகாரமளித்தல்
10. இடப்பெயர்வினை தடுக்கிறது
11. பருவகாலங்கள் இல்லாத காலத்தில் வருமானத்திற்கு உத்தரவாதம்
12. போக்குவரத்து (ம) ஆற்றல் பயன்பாட்டைக் குறைத்துள்ளது.

**தீமைகள்**

1. ஊரகப் பகுதிகளில் பணவீக்கம்
2. பாதுகாப்பற்ற சொத்துக்கள்
3. செயல்படுத்துதலில் உள்ள இடைவெளிகள்
4. விளிம்புநிலை பிரிவினர் மீது கவனம் செலுத்தாதது
5. ஊதியம் வழங்குவதில் தாமதம்
6. நிதி உள்ளடக்கத்தில் காணப்படும் குறைபாடுகள்
7. வேளாண்துறையில் மனித ஆற்றல் குறைபாடுகள்

**2. வேலைவாய்ப்புத் திட்டங்கள் சிலவற்றை குறிப்பிட்டு விவரி.**

**வேலைவாய்ப்புத் திட்டங்கள்**

**1. கிராமப்புற இளைஞர்களுக்கான பயிற்சி (ம) சுயவேலைவாய்ப்புத் திட்டம் – 1979**

1. கிராமப்புறத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள இளைஞர்களுக்கு தொழில் (ம) வியாபாரப் பயிற்சி அளித்தல்
2. சுயவேலைத் தொடங்குவதற்கு பயிற்சி அளித்தல்
3. வயது 18 – 35

**2. ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டம் – 1980**

1. வறுமைக்கோட்டிற்கு கீழ்உள்ள மக்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளித்தல்
2. இதன் துணைத்திட்டங்கள் – TRYSEM, கங்கா கல்யாண் யோஜனா, சித்ரா, மில்லியன் கிணறுத்திட்டம்

**3. ஜவஹர் ரோக்கர் ஜோஜனா 1989**

தேசிய ஊரக வேலைவாய்ப்புத்திட்டம் (ம) கிராமப்புற நிலமற்றோருக்கான வேலைவாய்ப்பு உறுதியளிப்புத்திட்டம் ஆகிய இரண்டும் இணைந்து உருவாக்கப்பட்டது.
இது கிராமப்புற மக்களுக்கான வேலைவாய்ப்பை அளிக்கிறது.

**4. நேரு ரோஜ்கர் யோஜனா 1989**

இது நகர்ப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.

**5. வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் – 1993**

கிராமத்தில் 18 – 60 வயதிற்குட்பட்டு உழைக்கும் தகுதியுள்ளவர்களுக்கு, வேளாண்மைத் தொழில் இல்லாத நாட்களில், 100 நாட்களுக்குக் குறைவில்லாமல் வேலைவாய்ப்பு தருதல்.

**6. பிரதமமந்திரி ரோக்ஜர் யோஜனா 1993**

இளைஞர்களுக்கு சுயமாக தொழில் துவங்க ரூ 1 – 2 லட்சம் வரை கடன் உதவி வழங்கப்படுகிறது.

**7. வறட்சிக்கு இலக்காகும் பகுதித்திட்டம் – 1973**

வறட்சிக்கு இலக்கான பகுதிகளில் வளர்ச்சியை ஏற்படுத்தி நிலம் நீர் (ம) இயற்கை வளங்களை சமநிலையில் கொண்டு வருவதாகும்.

**8. பொன்விழா ஆண்டு தன்வேலைவாய்ப்புத்திட்டம் – 1997**

1. இது சுதந்திரமடைந்து 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதை கொண்டாடும் வகையில் ஏற்படுத்தப்பட்டது.
2. நகர்ப்புற வேலையற்ற மக்களுக்கு சுயவேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.

**9. ஜவஹர் கிராம சம்ரிதி யோஜனா – 1999**

கிராமப்புற கட்டமைப்புகளின் முன்னேற்றம் (ம) வேலையற்ற ஏழைகளுக்கு கூலி வேலைகள் பெற்றுத்தருதல்.

**10.அந்தியோதயா அன்ன யோஜனா – 2000**

ஏழைகளுக்கு பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ், 1 கிலோ அரிசி ரூ 2, 1 கிலோ கோதுமை ரூ 3 க்கு வழங்கப்படுகிறது.

வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்திற்கு மாதம் 35 கிலோ உணவு தானியம் வழங்கப்படுகிறது.

**11.சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா – 2001**

வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத்திட்டம், ஜவஹர் கிராம் சம்ரிதி யோஜனா, ஜவஹர் ரோஜ்கர் யோஜனா ஆகிய மூன்றும் இணைந்த திட்டம்

**12. வேலைக்கு உணவுத்திட்டம் – 2001**

1. வறட்சியால் பாதிக்கப்பட்ட 8 மாநிலங்களில் உள்ள கிராமப்பகுதிகளில் வேலை வாய்ப்புகளை அளித்து, பசியை போக்குவதற்கான திட்டம்
2. வேலைக்கான கூலி பாதி உணவு, மீதி பணமாக வழங்கப்படும்.

**13. ஸ்வர்ண ஜெயந்தி கிராம் ஸ்வரோஜ்கர் யோஜனா – 1999**

IRDP, TRYSEM, சித்ரா, கங்கா கல்யாண் யோஜனா, மில்லியன் கிணறுகள் திட்டம் இணைந்த உருவாக்கப்பட்டது.

**14. ஜெயப்பிரகாஷ் நாராயண் ரோஜ்கர் உத்திரவாதிட்டம்: 2002-02**

**15. MGNREG திட்டம் - 2005**